எல்லா மாநிலங்களையும் சேர்த்து பொதுவான கொள்கையை மத்திய அரசாங்கம் கடைப்பிடிப்பதன் மூலம் இந்த ஆணையைத் தீவிரமாக அமல் படுத்த முடியும்.

சென்னையில் இயங்கும் நீதிமன்றங்கள்

*189 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் நடமாடும் நீதிமன்றங்கள் தற்போது எத்தனை இயங்குகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சென்னையில் நான்கு நடமாடும் நீதி மன்றங்கள் இயங்குகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி : சென்னையிலே நடமாடும் நீதிமன்றங்கள் இருந்து, குற்றவாளிகளை உடனடியாக விசாரித்து தண்டனை கொடுக்கிறார்கள். அதுபோல் வட்டங்களில் குற்றம் செய்பவர்களை உடனுக்குடன் தண்டிக்க வாய்ப்பு ஏற்படும் வகையில் நடமாடும் நீதிமன்றங்கள் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உடனுக்குடன் தண்டனை கொடுத்தால் நல்லது அல்ல. விசாரித்துத்தான் தண்டனை கொடுக்க வேண்டும். அதிக மான வழக்குகள் பெரிய நகரங்களில் வருவதால் அந்த நகரங்களுக்கு மட்டும் இந்தத் திட்டம் அமலாக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த நடமாடும் நீதிமன்றங்கள் சென்னையைத் தவிர வேறு எந்த நகரங்களில் இருக்கின்றன ? அப்படி வேறு நகரங்களில் இல்லையென்றால் மதுரை, கோவை, திருச்சி, சேலம் போன்ற அதிக ஜனத் தொகையுடைய நகரங்களில் நடமாடும் நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே சில நகரங்களுக்கு இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வந்தது. அந்த விவரம் இல்லை. எந்தெந்தப் பெரிய நகரங்களில் இதுபோன்ற வழக்குகள் அதிகமாக வருகின்றனவோ அங்கெல்லாம் இந்த முறை பின்பற்றப்படும்.

Water in Buckingham Canal.

*190 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that waters flowing in the Buckingham Canal in Madras City is becoming red; and

(*b*) if so, whether any experiments have been conducted thereon ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். சில சமயங்களில் பக்கிங்ஹாம் கால்வாயில் மாநகராட்சி குழாய்கள்மூலம் கழிவு நீரை விடுவதாலும், அக்கழிவு நீரிலும் மற்ற கழிவுப்பொருள்களிலும் மருந்து மற்றும் பல